அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 221

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1983, யூலை மாதம் 4 ஆந் தேதி.

செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்
அனைவருக்கும்.

1. மேல் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவது தொடர்பாக அரசாங்கக் கணக்குக் குழுவின் சிபார்சு.
2. ஒழுக்காற்று விடயங்களும் தாபனக் கோவையும்.

---

(1) 1979 இன் 11ஆம் இலக்கப் பாராளுமன்ற பிரசுரத் தொடரில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குக் குழுவின் அறிக்கையின் 35ஆம் பந்தியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தற்காகக் கீழே தரப்பட்டுள்ளது:

"(இது தொடர்பாக) அமைச்சுக்களின் செயலாளர்களோ அல்லது ஏனைய உத்தியோகத்தர்களோ அல்லது இருசாராருமோ அவர்களுடைய மேலதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கும் போது, அப்படி வழங்கப்பட்ட ஆலோசனையின் விபரங்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்றுக் கொண்டாலும் சரி இல்லாது போனாலும் சரி எழுத்தில் அவற்றைப் பதிய வேண்டும் என்ற ஒரு பொதுவான நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமெனத் தங்கள் குழு விதந்துரைக்கிறது."

(2) 12.04.1983ஆம் தேதிய 218ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை அதன் 8ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் திருத்தப்படுகிறது:

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் 12ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறுதல்.

ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் 12ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறும் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணையொன்று நடத்தி முடிந்ததன் பின்னர் அந்த விசாரணையின் காண்புகள் எந்தவகையில் உத்தியோகத்தரின் ஓய்வூதியத்தைப் பாதிக்கும் என்பது பற்றிக் கட்டளையிடுவதற்கு அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளர் மட்டுமே அதிகாரம் பெற்றுள்ளார். அவர் இத்தகைய கட்டளையொன்றை இடுவதற்கு இயலும் வகை செய்தற் பொருட்டு குற்றங்கள் தொடர்பாக தண்டனை மூலமோ, நிறுத்தவைக்கப்பட்ட வேதனாதிகளைக் கொடுக்காது விடுவதன் மூலமோ மேலதிகக் கட்டணம் விதிப்பதன் மூலமோ ஒரு உத்தியோகத்தர் மீது சுமத்தப்பட்ட நிதி அல்லது சேவைத் தகுதியின்மைகள் பற்றிய ஒரு அறிக்கையுடன் ஓய்வூதியப் பத்திரங்களை வழமையான முறையில் ஓய்வூதியப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அதன் பின்னர் ஓய்வூதியத்தைத் தடுத்து வைப்பதா அல்லது குறைப்பதா என்பது பற்றி அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரிடமிருந்து ஒரு கட்டளையை ஓய்வூதியப் பணிப்பாளர் பெறவேண்டும். பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக, உரிய அமைச்சொன்றின் செயலாளரும், கணக்கீட்டு உத்தியோகத்தராக, திணைக்களமொன்றின் தலைவரும் நிதிப் பிரமாணங்களினால் தமக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கை எடுக்கலாம். இடை நிறுத்தப்பட்ட காலப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்ட வேதனாதிகளை வழங்குவதோ அல்லது வழங்காது விடுவதோ பற்றி ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாயுள்ள அதிகாரியே தீர்மானித்தல் வேண்டும்.

ஒப்பம். டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.